# நாய் கடித்து உயிரிழக்கும் மாட்டுக்கு ரூ.37,500 – ஆடுகளுக்கு ரூ. 6 ஆயிரம் - கோழிக்கு ரூ.200 நிவாரணம்!

## தெரு நாய்கள் கடித்து சேதத்தை ஏற்படுத்துவது குறித்து கவன ஈர்ப்பில் அமைச்சர் இ.பெரியசாமி பதில்!

**சென்னை, மார்ச். 21-**

**சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.சி.கருப்பணன் விவசாயிகள் மேய்க்கின்ற ஆடுகள், கோழிகள் போன்ற கால்நடைகளை தெரு நாய்கள் கடித்து சேதத்தை ஏற்படுத்துவது குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டு இதற்கு உறுப்பினர்கள் பேசியதை அடுத்து அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.என்.நேரு பதிலளித்தனர்.**



அமைச்சர்களின் பதில் வருமாறு:

**இ. பெரியசாமி:** தெருநாய்களை கட்டுப்படுத்துவதற்காக நம்முடைய அரசு, கால்நடை பராமரிப்புத் துறை, நகராட்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகள் முறையாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஆங்காங்கே, சொல்லப்படக்கூடிய அடிப்படையில் எல்லா நகரங்களிலும், தெரு நாய்களுக்கு அங்கிருக்கக்கூடிய விலங்குகளை வதைக்கக்கூடாது என்று ஒரு குழு வைத்துக்கொண்டு அவைகளுக்கு உணவு வழங்குகின்ற முறையெல்லாம் இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, அங்கிருக்கக்கூடிய நாய்களுக்கு கருத்தடை செய்து, அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் உங்களுடைய கோரிக்கைகளை ஏற்று, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு ஒரு ஆணையிட்டிருக்கிறார்கள்.

சமீப காலங்களில் தெரு நாய்கள் கடித்து, வெள்ளாடு, செம்மறியாடு, பசு, எருமை, கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. இச்சம்பவங்கள் குறித்த விவரங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டு, கவனமாக ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் மாநிலத்திலுள்ள கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் கால்நடை விவசாயிகளால் வளர்க்கப்படும் மேற்படி பிராணிகள், நாய் கடித்து உயிரிழக்கும் நேர்வுகளில் உரிய இழப்பீடு வழங்க பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, அடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதித் திட்டத்தின்கீழ் பின்வருமாறு இழப்பீடுகள் வழங்க முதலமைச்சர் அவர்கள் இன்று காலை ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி நாய் கடித்து உயிரிழக்கும் மாடு ஒன்றுக்கு 37 ஆயிரத்து 500 ரூபாயும், வெள்ளாடு, செம்மறியாடு ஒன்றுக்கு நான்காயிரம் ரூபாயும், கோழி ஒன்றுக்கு நூறு ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படும். இதுவரை உயிரிழந்த 1,149 பிராணிகளுக்கு 42,02,600 ரூபாய் இழப்பீடாக வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை தங்களின் வாயிலாக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

இப்பேரவையில் நாய்க் கடியின் காரணமாக ஏற்படுகின்ற கால்நடைகளின் உயிரிழப்புக்கான இழப்பீட்டுத் தொகையினை அறிவித்திருந்தேன். இது குறித்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், தற்போது முதலமைச்சர் அவர்கள், செம்மறி ஆடு, வெள்ளாடு ஆகியவற்றின் உயிரிழப்பிற்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட ரூ.4,000/-ஐ, ரூ.6,000/- ஆக உயர்த்தியும், கோழி உயிரிழப்பிற்கு அறிவிக்கப்பட்ட ரூ.100/-ஐ, ரூ.200/- ஆக உயர்த்தியும் வழங்கிட அறிவித்துள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** நேற்றைய முன்தினமே இது குறித்து நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் எவ்வளவு நிவாரணம் என்ற விவரங்களை இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த ஆண்டு அதிகாரிகளோடு கலந்து பேசி, முதலமைச்சர் அவர்களுடனும் கலந்துபேசப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற தெரு நாய்களைப் பிடித்து ஒரே இடத்தில் அடைப்பது போன்று வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் முன்மாதிரியாகச் செய்திருக்கிறார்கள். அதை எல்லா நகரங்களிலும் செய்ய முடியுமா என்பதை ஆய்வு செய்து, அதைக் கொண்டுவர வேண்டும்.

பொதுவாக, வெறிநாய் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். வெறிநாய்களைப் பிடிப்பதற்கு மட்டும் சட்டத்தில் இடமிருக்கிறது. அவற்றைப் பிடித்து, நோயைக் குணப்படுத்துவதற்கான ஊசியைப் போட்டு, மீண்டும் விட்டுவிட வேண்டும் என்ற வகையில்தான் சட்டத்தில் இடமிருக்கிறது. இதுதான் சட்டம். இதை மீறி ஏதேனும் செய்தால், அதில் பணியாற்றுகிற ஊழியர்கள்மீது நடவடிக்கை பாய்ந்துவிடுகிறது. எனவே, இதற்கொரு தனி தீர்வு காண வேண்டும். அதைத்தான் நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சொன்னேன். நேற்றைய முன்தினம் பேசும்போதுகூட, இதுகுறித்து ஒரு தனிநபர் தீர்மானம் கொண்டுவருவது குறித்து குறிப்பிட்டேன். மேலும், உச்ச நீதிமன்றத்தில் இதுகுறித்து ஏதேனும் மறு உத்தரவு வந்தால்தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வினைக் காண முடியும். ஏனெனில், உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி எதையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இங்கு இருக்கிறது. இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் சார்பாக முழு நிவாரணத் தொகையும் வழங்க முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நகரப் பகுதிகளில் இருக்கிற நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் இடத்தில் கொண்டு சென்று அடைக்க முடியுமா என்பது பற்றி ஆராய்ந்து, அதைச் செயல்படுத்தலாம்.

இவ்வாறு அமைச்சர் இ. பெரியசாமி, கே.என்.நேரு ஆகியோர் பதிலளித்தனர்.

---

### அந்தியூர் தொகுதி – கெட்டிசமுத்திரம்

# ஏரிச்சாலை அகலப்படுத்தப்பட்டு விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, மார்ச் 21-

அந்தியூர் தொகுதி கெட்டிசமுத்திரம் ஏரிச்சாலையில் ஏற்படும் விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தியூர் தொகுதி உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் பதிலளித்தார்.

இதுகுறித்த விவாதம் வருமாறு :-

**ஏ.ஜி.வெங்கடாசலம்:** ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, கெட்டிசமுத்திரம் ஊராட்சி, கெட்டிசமுத்திரம் ஏரிக்கரையை ஒட்டிச் செல்கின்ற சாலை மிகவும் குறுகலாக, ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய ஒரு வழிச் சாலையாக உள்ளது. அந்தியூர்-பர்கூர் சாலை, சங்கராப்பாளையம் ஊராட்சி, மூலக்கடை-எண்ணமங்கலம்-பர்கூர் சாலை முச்சந்திப்பு சாலை ஆகிய இரு இடங்களில் முன்னும் பின்னும் அகலமான இருவழிச் சாலை உள்ள நிலையில், ஆபத்தான நிலையில் உள்ள ஒருவழிச் சாலையை அகலப்படுத்தி, இருவழிச் சாலையாக அமைத்து, அந்தச் சாலையில் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.



**அமைச்சர் எ.வ.வேலு:** சாலையை அகலப்படுத்துவது குறித்த இந்த கவன ஈர்ப்பின் மூலமாக ஒரு செய்தியை உங்களிடத்தில் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் தான் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. சாலையின் போக்குவரத்துச் செறிவு 2,000 PCU-Passenger Car Unit அதற்கு மேல் இருக்குமேயானால் ஒரு வழிச் சாலையாக அதாவது, தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலத்திற்குமேல் 5.50 மீட்டர் அகலம் கொண்ட இடைவழிச் சாலையாக அகலப்படுத்தப்படும்.

சாலையின் போக்குவரத்துச் செறிவு 5,500 PCU-க்கு மேல் இருந்தால், அது 7 மீட்டர் சாலையாக அகலப்படுத்தப்படும். சாலையின் போக்குவரத்துச் செறிவு 15,000 PCU-க்கு மேல் இருந்தால் 10 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்படும். சாலையின் போக்குவரத்துச் செறிவு 17,250 PCU இருந்தால், அது நான்குவழிச் சாலையாக அமைக்கப்படும் என்ற கருத்தை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம் குறிப்பிட்ட சாலையானது, அந்தியூர்- பர்கூர்-கொள்ளேகால் சாலையாகும். இது உயர் மட்ட MDR சாலையாகும். 51 கி.மீ. உள்ள மலைச் சாலை, 2 வழித்தடம் கொண்ட சாலையாகும். கெட்டிசமுத்திரம் ஏரிக்கரையில் செல்லும் 800 மீட்டர் சாலை மட்டும் இடைவழித்தடம் அதாவது 5.50 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது.

இந்த ஏரிச் சாலையில் 150 மீட்டர் நீளத்திற்கு ஏற்கெனவே தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு, சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதி எஞ்சியிருக்கிற 650 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச்சுவர் அமைப்பதற்கு அகலப்படுத்துவதற்கு ஏற்ற அளவிற்கு நிதி நிலை ஒதுக்கீடு செய்ய முடியுமென்று சொன்னால் இந்த ஆண்டே அது எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

---

### கரும்புக்கு டன்னுக்கு ரூ.4000 கொடுத்து விடுவோம்!

# திராவிட மாடல் ஆட்சியில் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

சென்னை, மார்ச் 21-

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் பேசும்போது குறுக்கிட்டு வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசுகையில் திராவிட மாடல் ஆட்சியில் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்றும் வரும் ஆண்டில் கரும்புக்கு டன்னுக்கு 4000 ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பேரவையில் **அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம்** தெரிவித்ததாவது :-



உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவர், ஏதோ குறை சொல்ல வேண்டும் என்றொரு நப்பாசையில் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருக்கு என்னுடைய பதிலுரையின் போது நான் விளக்கமளிக்கிறேன். அவர், உற்பத்தித் திறன் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்; நாங்கள் உற்பத்தித் திறன் உயர்த்தியிருக்கிறது என்று சொல்கிறோம். அவர் எந்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் இவ்வாறு சொல்கிறார் என்று தெரியவில்லை. 1 இலட்சத்து 81 ஆயிரம் பாசன மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டதால், வறண்ட நிலங்களும் வளம் பெற்றுள்ளன என்று வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த போது நான் படித்தேன். அப்போது, பயிர் சாகுபடி பரப்பளவு அதிகரித்திருக்கிறது என்று நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன். அவர், குற்றம் சொல்ல வேண்டும் என்றொரு எண்ணத்தில் குற்றம் சொல்கின்றார்கள்.

இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கிராமங்களில் எல்லோரும் பச்சைத் துண்டை போடுகின்ற அளவுக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள் என்று மக்கள் சொல்கிறார்கள். ஏனெனில், கடந்த ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் சென்றால் மதிக்கப்படாமல் இருந்தார்கள். இப்போது, கேட்கின்றதை கொடுக்கின்ற தலைவர் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் மதிக்கப்படுகின்றவர்களாக இருக்கிறார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளாக இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும்கூட, கிட்டத்தட்ட ரூ.1,642 கோடி அளவிற்கு அவர்களுக்குத் தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

2021-2022 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 108 டன்னராக இருந்தது; அதை தற்போது நாங்கள் 109 டன்னாக உயர்த்தியிருக்கிறோம். ஆக, விவசாயத்தைப் பொறுத்தவரையில், மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரும்பை பொறுத்தவரை, நாங்கள் சொன்ன target-ஐ reach ஆகிவிடுவோம். கடந்த காலங்களில் அவர்கள் ஆட்சியில் இருந்ததைவிட கிட்டத்தட்ட ஒரு மெட்ரிக் டன்னுக்கு 400 ரூபாய்க்கு மேல் கூடுதலாக கொடுத்து, தற்போது சுமார் ரூ.3,500 வழங்கப்பட்டு வருகிறது. வருகின்ற ஆண்டு கண்டிப்பாக மெட்ரிக் டன்னுக்கு ரூ.4,000-ஐ கொடுத்துவிடுவோம் என்பதை நாங்கள் இந்த நேரத்தில் உறுதியாகக் கூறிக்கொள்கிறோம். பணமே கொடுக்காமல், விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலைமை கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்தது. அவர் முன்னாள் இருந்தவர். இதே சட்டமன்றத்தில் நானும், அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களும் விவசாயிகளுக்கான கரும்பு பாக்கியை கேட்டு, கேட்டு அலுத்துப்போய்விட்டோம். ஆனால், தற்போது நிலுவைத் தொகை இல்லாமல் கரும்பு விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணத்தை வழங்குகிற அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள், நெல்லினுடைய ஆதார விலையை கூடுதலாக உயர்த்தியிருக்கின்றார்கள். அதே போல், கரும்பினுடைய ஆதார விலையை உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிதி நெருக்கடி இருந்தாலும், விவசாயிகள் பாதிக்கபடக் கூடாது என்ற எண்ணத்தில் இந்த அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பு ரிந்துக்கொண்டி ருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலளித்தார்.

---

### நல்லாட்சி தரும் திராவிட மாடலுக்கு எதிராக

# நயவஞ்சகர் நடத்தும் சதி நாடகம் பாரீர்!

**தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அதன் மக்கள் நலத்திட்டங்களால் மக்களின் மனங்களை வெல்லும்போதெல்லாம் திமுக விற்கு எதிராக மக்கள் மனங்களில் நஞ்சை விதைக்கும் விதமாக ஆரியம் பல்வேறு சதிகளைச் செய்து வந்திருக்கிறது.**

**3 வது முறையாக இமாலய வெற்றியைப் பெறலாம் என்று நம்பிக் கொண்டிருந்த நரேந்திர மோடிக்கு எதிராக இந்தியா முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் நம் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**அதன் விளைவு ஒன்றியத்தில் போதிய பெரும்பான்மை இல்லாத நிலையில் கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் ஆட்சி அமைக்கும் நிலைக்கு பாஜக இன்று தள்ளப்பட்டுள்ளது. சந்திரபாபு அவர்களும், நிதிஷ்குமார் அவர்களும் தங்கள் ஆதரவைத் திரும்பப் பெறும் சூழல் ஏற்பட்டால் மோடி அரசு எப்போது வேண்டுமானாலும் கவிழும் என்பதுதான் தற்போதைய சூழல். இப்படியான ஒரு சூழலை உருவாக்கிய திமுக தலைவர் ஸ்டாலினை பழிவாங்க திட்டமிட்டுள்ளது ஆரிய பாசிச பாஜக.**

**அதுவும் இன்னும் ஓராண்டில் தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் வர இருக்கும் நிலையில், மீண்டும் திமுக இமாலய வெற்றி பெறும் என்று கருத்துக் கணிப்புகள் சொல்லி வரும் நிலையில், பாஜக தன் சதியை வேகப்படுத்தத் தொடங்கியுள்ளது.**

**அதன் ஒரு பகுதிதான் டாஸ்மாக் நிறுவனத்தை மையப்படுத்தி பாஜக கட்டி எழுப்பியுள்ள ஊழல் திரைக்கதை. இதில் உண்மையிலேயே நடப்பது என்ன என்பதை நம் கழக உடன்பிறப்புகள் அறிந்து கொள்வதோடு அதை மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லி பாசிச பாஜக வின் சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டிய மாபெரும் கடமையும் நமக்கிருக்கிறது.**

**பாஜக வின் பாசிச சதி வலையை விவரிப்பதே இந்த கட்டுரை.**

கடந்த 6 ம் தேதி ( 06-03-25 ) அன்று சென்னையில் உள்ள டாஸ்மாக் அலுவலகத்தில் ஒன்றிய பாஜக அரசின் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அதைத் தொடர்ந்து தமிழக பாஜக வினர் அவர்களின் சமூகவலைத்தள அடிவருடிகளின் மூலம் இதில் பல்லாயிரம் கோடி ஊழல் நடந்திருப்பதாக செய்தியை கசிய விட்டனர். தொடர்ந்து தமிழக ஊடகங்களுக்கு இது குறித்து ஏன் விவாதிக்கவில்லை என்று சமூக வலைதளங்களின் மூலமும் இன்னபிற வழிகளிலும் அழுத்தம் கொடுத்தது பாஜக . அடுத்த ஓரிரு நாட்களில் ஆயிரம் கோடி டாஸ்மாக் ஊழல் என்ற புது கதையை ஒரே மாதிரி எல்லோரையும் சொல்ல வைத்தது. கடந்த 17 ம் தேதி பாஜக டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்போவதாக ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. இதன் உண்மைப் பின்னணியை அறிந்தால் நீங்கள் அதிர்ந்து போவீர்கள்.

**ஆம் கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கும் சேர்த்து தற்போது திமுக வின் மீது சேற்றை வாரி வீசிக் கொண்டிருக்கிறது பாஜக. டாஸ்மாக் சில்லறை விற்பனை மையங்களில் ஏதும் முறைகேடுகள் நடக்கிறதா என மாநில அரசின் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் சோதனை நடத்துவது வாடிக்கை. அவ்வாறு மாநில அரசின் லஞ்ச ஒழிப்பு காவல்துறை சோதனை நடத்தியதன் அடிப்படையில் மொத்தம் 41 வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இந்த 41 வழக்குகளில் 34 வழக்குகள் கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் 2016 முதல் 2021 வரையிலான காலக்கட்டத்தில் சோதனை நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள். 2021 ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நம் கழக அரசு அமைந்த பிறகு மாநில லஞ்ச ஒழிப்பு போலீசார் டாஸ்மாக் மையங்களில் நடத்திய சோதனைகளின் அடிப்படையில் 7 வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இந்த வழக்குகளின் அடிப்படையில்தான் ஒன்றிய பாஜக அரசின் அமலாக்கத்துறை தற்போது டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் சோதனை நடத்தி ஒரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.**

இதில் நமக்கு எழக்கூடிய சில அடிப்படையிலான கேள்விகள்.

**1. கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட 34 வழக்குகளையும் சேர்த்து தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் மீது களங்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பது ஏன் ?**

**2. அதிமுக ஆட்சியில் இருந்தபோது அவர்களோடு கூட்டணியில் இருந்த பாஜக அப்போது ஏன் இந்த சோதனையை நடத்தவில்லை.?**

இந்த இரண்டு கேள்விகள் போதும் பாஜக வின் பொய் முகத்தை தோலுரித்துக் காட்டுவதற்கு.

திட்டமிட்டே பாஜக இந்த சதி வேலையைச் செய்வது புலனாகிறது. பாஜக ஏன் இந்த சதி வேலையைச் செய்கிறது என்பதை நாம் புரிந்து கொள்வதும் மிக மிக அவசியம். பாஜக உடன் மற்ற மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் அரசியல் ரீதியிலான சண்டையை மட்டுமே செய்து வரும் நிலையில் பாஜக உடன் சித்தாந்த மோதலையும் செய்து வரும் ஒரே தலைவர் நம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள்தான்.

**1. கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட 34 வழக்குகளையும் சேர்த்து தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் மீது களங்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பது ஏன் ?**
**2. அதிமுக ஆட்சியில் இருந்தபோது அவர்களோடு கூட்டணியில் இருந்த பாஜக அப்போது ஏன் இந்த சோதனையை நடத்தவில்லை.?**

எடப்பாடி பழனிசாமி ஆட்சிக் காலத்தில் மண்ணைப் போட்டு மூடிய கீழடியை மீண்டும் அகழாய்வு செய்ததோடு நில்லாமல் தமிழர் நாகரீகமே தொன்மையானது என்பதை நிறுவும் வண்ணம் கீழடியில் ஒரு அருங்காட்சியகத்தைத் திறந்தார் நம் முதலமைச்சர்.

**தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட நெல் மணியை நவீன கரிம ஆய்வுக்கு உட்படுத்தி அதன் ஆயுட்காலம் 3000 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை சட்டப்பேரவையில் உரக்கச்சொல்லி மகிழ்ந்தார். ஆரியர்கள்தான் இரும்பை பயன்படுத்தும் அறிவைப் பெற்றிருந்தனர் என்ற புனைவை உடைத்து இரும்பின் காலம் தமிழ் நாட்டில் இருந்துதான் தொடங்கியது என்பதை தரவுகளுடன் நிறுவி ஆரியத்தின் ஆணி வேரை அசைத்தார்.**

சிந்துச் சமவெளி நாகரீகமும் தமிழர் நாகரீகமே என்பதை வரலாற்றுத் தரவுகளுடன் பதிவு செய்தார். இப்படி தொடர்ந்து ஆரிய வேத நாகரீகத்தைப் பற்றிய புனைச் சுருட்டுகளை உடைத்து தமிழர் நாகரீகத்தை உயர்த்திப் பிடித்து வரும் நம் முதலமைச்சரை ஆரியம் வீழ்த்த நினைப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அதனால்தான் சிந்துச் சமவெளி நாகரீகமும் தமிழர் நாகரீகமே என்று நாம் சொல்லத் தொடங்கியதும், ஆளுநர் ஆர்.என்.ரவி. சிந்துச் சமவெளி நாகரீகம் என்று சொல்லக் கூடாது சிந்து சரஸ்வதி நாகரீகம் எனச் சொல்ல வேண்டும் என்று சொன்னது இந்த சித்தாந்த மோதலின் வெளிப்பாடே.

மற்ற மாநிலங்கள் எல்லாம் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நிலையில், நம் முதல்வர் அதை தீரத்துடன் எதிர்க்கிறார். மற்ற மாநிலங்கள் அமலாக்கத்துறையைக் கண்டு அஞ்சிக் கொண்டிருந்த போது, அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி விவகாரத்தில் அமலாக்கத் துறை அலுவலகத்திலேயே மாநில லஞ்ச ஒழிப்பு காவல்துறையை வைத்து சோதனை நடத்தினார்.

பிரதமரை மேடையில் வைத்துக் கொண்டே மாநில அரசுக்கு தர வேண்டிய நிதியைக் குறித்தும் மாநில உரிமைகள் குறித்தும் ஆளுமையுடன் கேள்வி எழுப்பினார். வரியை மட்டும் பெற்றுக்கொண்டு நிதியை தர மறுத்தால் , தமிழ்நாடு, ஒன்றிய அரசிற்கு வரி தர மறுக்கும் நிலை உருவாகும் என்று எச்சரித்தார்.

அரசு தயாரித்துக் கொடுத்த ஆளுநர் உரையை ஆர்.என். ரவி வாசிக்க மறுத்து வார்த்தைகளைத் தவிர்த்த போது. சட்டப் பேரவை விதிகளின் படி ஆளுநருக்கு வகுப்பெடுத்தார்.

ஹிந்தி திணிப்பை என்றும் எதிர்போம் எனும் அண்ணாவின் கொள்கையில் உறுதிபட நிற்கிறார். தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது ரூபாயைக் குறிக்கும் வண்ணம் அதுவரை இடம்பெற்றிருந்த தேவநஹரி எழுத்திற்கு மாற்றாக ரூ – வை பயன்படுத்தி பாஜகவின் வயிற்றில் புளியைக் கரைத்தார்.

தமிழ்நாட்டோடு நின்றாலும் பரவாயில்லை, தொகுதி மறுவரையறை குறித்து பாஜக சிந்திக்கத் தொடங்கியதும், பாஜக அல்லாத கட்சிகள் ஆளும் மாநில முதலமைச்சர்களை ஒருங்கிணைத்து பாஜக விற்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார்.

திமுக எம்பிக்கள் நாடாளுமன்றத்திற்கு போய் என்ன செய்யப் போகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் எள்ளி நகையாடிய நிலையில், நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி.க்கள் மோடியை,



" தமிழ் கேள்வி "
**தி.செந்தில்வேல்**
ஊடகவியலாளர்

அமித்ஷாவை, நிர்மலா சீதாராமனை கேள்விக் கணைகளால் துளைத்தெடுக்க அவர்கள் அவையை விட்டு அஞ்சி ஓடும் நிலையை உருவாக்கினார்.

நல்லாட்சி திட்டங்களால் மட்டுமல்ல சித்தாந்தப் போரிலும் பாஜக வை ஓட ஓட விரட்டுவதால் நம் கழக அரசின் மீது களங்கத்தை ஏற்படுத்தத் துடிக்கிறது பாஜக.

ஊழல்வாதிகளுக்கெல்லாம் அடைக்கலம் கொடுத்து அவர்களை அமலாக்கத்துறையை வைத்து மிரட்டி தங்கள் கட்சியிலோ அல்லது கூட்டணியிலோ இணைத்து முதலமைச்சராகவோ அல்லது துணை முதலமைச்சராகவோ மாற்றுவதுதான் பாஜக வின் வாடிக்கை.

அந்த வகையில் 70 ஆயிரம் கோடி நீர்ப்பாசன ஊழல் குற்றச்சாட்டை அஜித் பவாரின் மீது சொன்ன பாஜக அவர் பாஜக கூட்டணியில் இணைந்ததும் அந்த வழக்கை நிறுத்தி வைத்ததோடு அவரை மகராஷ்டிரா மாநிலத்தின் துணை முதலமைச்சராக்கியுள்ளது.

சாரதா சிட்பண்ட் ஊழல் வழக்கில், பாஜக வால் குற்றம் சாட்டப்பட்ட ஹிமந்த பிஸ்வா சர்மா பாஜக வில் இணைந்ததும் அவரை அசாம் மாநில முதலமைச்சர் ஆக்கி அழகு பார்த்தது பாஜக.

அரசியல்வாதிகளை மட்டுமல்ல ஏழை, எளிய மக்களையும் அமலாக்கத்துறையை வைத்து கூச்சமின்றி மிரட்டுகிறது பாஜக. தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தை சேர்ந்த கண்ணையன் , கிருஷ்ணன் ஆகிய இரண்டு விவசாயிகளுக்கு அவர்களின் சாதிப் பெயரைக் குறிப்பிட்டு நோட்டிஸ் அனுப்பி மிரட்டிய பெருமை பாஜகவை மட்டுமே சேரும்.

லோக்பால் அமைத்தே தீருவோம் என்று ஆட்சிக்கு வந்த பாஜக தற்போது வரை லோக்பாலை அமைக்கவும் இல்லை அதற்காக போராடிய அன்னா ஹசாரேக்களையும் காணவில்லை.

சிஏஜி அறிக்கையை வைத்து திமுக வின் மீது 2 ஜி ஊழல் குற்றச்சாட்டை அபாண்டமாக சுமத்தியது பாஜக. ஆனால், சட்டத்தின் துணை கொண்டு அந்த சதியை முறியடித்தது திமுக. தற்போது அதே சிஏஜி பாஜக வின் மீது ஏழரை லட்சம் கோடி ஊழல் குற்றச்சாட்டை சுமத்தி யுள்ளது. இது குறித்து பாஜக விடம் எந்த பதிலும் இல்லை.

உலகம் முழுவதும் சுற்றி வரும் பிரதமர் மோடி அமெரிக்காவின் அழுத்தத்திற்காக அமெரிக்க மதுபானத்திற்கு 150 விழுக்காட்டில் இருந்து 50 விழுக்காடாக வரியைக் குறைத்ததைத் தவிர கடந்த 11 ஆண்டுகளில் எந்த விலைவாசியையும் குறைக்கவில்லை.

இவை குறித்தெல்லாம் மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கியதும், அதை திசை மாற்ற, பாசிச பாஜக அரசின் தோல்விகளை மடைமாற்ற வழக்கம் போல் திமுக வின் மீது ஊழல் சேற்றை வாரி இறைத்து தன் வஞ்சக சதியை தொடங்கியுள்ளது பாஜக. இன்னும் ஓராண்டில் தேர்தல் வர உள்ள நிலையில் பாஜக தன் சதி வேலைகளை இன்னும் வேகப்படுத்தக் கூடும்.

பாஜக விற்கு ஒன்று மட்டும் புரியவில்லை. வட மாநிலங்களைப் போல தமிழக மக்களை ஏமாற்றிவிட முடியாது. அதனால்தான் 2019 நாடாளுமன்ற தேர்தல் தொடங்கி தற்போது வரை தொடர் வெற்றிகளை குவித்து வருகிறார் நம் கழகத் தலைவர். வரும் 2026 சட்டபேரவை தேர்தலிலும் 200 தொகுதிகளை கழகத் தலைவர் தலைமையில் நாம் வெல்லப்போவது உறுதி . 10 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த நல்லாட்சியை தமிழ்நாடு ஒருபோதும் இழக்க விரும்பாது.

ஆயினும் கழகத் தோழர்கள், ஜனநாயக சக்திகள், புத்திஜீவிகள், பாஜக வின் இந்த சதி வேலைகளை மக்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்வோம்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம்.

**பாசிசம் வீழட்டும். தமிழ்நாடு போராடும்.**
**தமிழ்நாடு வெல்லும்.**